தினமணி

## கோடை வெயில்: பழங்கள் விலை உயர்வு

First Published : 28 Apr 2011 02:14:34 AM IST



திருத்தணி ம.பொ.சி. சாலை கடையொன்றில் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ள பழங்கள்.

திருத்தணி, ஏப். 27: கோடை வெயில் காரணமாக பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. இதேபோன்று அவற்றின் விலையும் அதிகரித்து வருகிறது.

தமிழகத்தில் கோடைகாலம் தொடங்கி உள்ளதால் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. திருத்தணி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் மக்கள் வெயிலின் சூட்டைத் தணிப்பதற்காக அதிகளவில் பழச்சாறுகளை அருந்தத் தொடங்கி உள்ளனர்.

தமிழகத்துக்கு தேவையான ஆப்பிள்கள் தில்லி, சிம்லா ஆகிய இடங்களில் இருந்து வாரத்துக்கு 20 டன் விற்பனைக்கு வருவது வழக்கம்.

ஆனால் தற்போது சீசன் இல்லை என்பதால், குளிர்பதன கிடங்குகளில் வைத்து பாதுகாக்கப்பட்டு வந்த பழங்களே விற்பனைக்கு வருகின்றன. இதனால் திருத்தணி காமராஜர் மார்க்கெட்டில் ஆப்பிள் விலையில் கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் வரை ஆப்பிள் ஒன்று ரூ.10 முதல் 12 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது ஒரு பழம் ரூ.15 முதல் 20 வரையிலும், மொத்த விலையில் ஒரு கிலோ ரூ.120-க்கும், சில்லறை விலையில் ரூ.140-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல் புதன்கிழமை நிலவரப்படி மாதுளைப் பழம் மொத்த விலையில் கிலோ ரூ.110-க்கும், சில்லறை விலையில் கிலோ ரூ.140-க்கும் விற்பனை செய்யப்பட்டது. சப்போட்டா பழத்தின் வரத்தும் பாதியாக குறைந்து விட்டது. இதன் விலை 15 முதல் 40 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

சப்போட்டா கிலோ ரூ.30 முதல் 40 வரை விற்றது. மற்ற பழங்களின் விலையிலும் உயர்வு ஏற்பட்டுள்ளது.

திராட்சை ஒரு கிலோ ரூ.50 முதல் 60 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது கிலோ ரூ.60 முதல் 90 வரை விற்கிறது. திராட்சை, ஆப்பிள் பழங்களின் விலையில் ஏற்பட்டுள்ள ஏற்றம் நடுத்தர வர்க்கத்தினரை விழிபிதுங்க வைத்துள்ளது.

அதேநேரத்தில் ஆந்திர மாநிலத்தில் இருந்து அதிகளவில் சாத்துக்குடி பழங்களின் வரத்து அதிகரித்துள்ளதால்

**தமிழகம், புதுவையில் சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 28 Apr 2011 02:08:05 AM IST

Last Updated : 28 Apr 2011 03:35:45 AM IST



சென்னை, ஏப். 27: தமிழகம், புதுவையில் ஒரு சில இடங்களில் வியாழக்கிழமை மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் வெயிலுடன் கூடிய காலநிலை நீடித்தது. எனினும், மாநிலத்திலேயே அதிகபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் 40 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. முக்கிய இடங்களில் புதன்கிழமை காலை 8.30 மணி வரை பதிவாகியுள்ள மழையளவு விவரம் (மில்லி மீட்டரில்):

திருத்துறைப்பூண்டி, பெரியநாயக்கன்பாளையம், வானூர், சீர்காழி, கழுகுமலை 30, சேலம், விருத்தாச்சலம், ஸ்ரீமுஷ்ணம், ராமேசுவரம், செய்யூர், உத்திரமேரூர் 20, சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், பண்ருட்டி, கடலூர், கமுதி, பேரையூர், சோழவந்தான், ராஜபாளையம், வத்திராயிருப்பு, நன்னிலம், நாங்குநேரி 10.

வானிலை முன்அறிவிப்பு: தமிழகம், புதுவையில் ஒரு சில இடங்களில் வியாழக்கிழமை இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

சென்னையில்... நகரில் வியாழக்கிழமை பொதுவாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும். பகலில் அதிகபட்ச வெப்ப நிலை 93 டிகிரி அளவாக இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**"அமோக விளைச்சலுக்கு மண் பரிசோதனை அவசியம்'**

First Published : 28 Apr 2011 12:27:00 AM IST

திருவள்ளூர், ஏப். 27: விவசாயிகள் என்ன பயிர் செய்தாலும் அதை வளமாக்க மண் பரிசோதனை அவசியம் என வேளாண்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் தங்களின் ரத்தத்தையும், வியர்வையையும் சிந்தி பயிரிட்டு அறுவடை நேரத்தில் உழைப்புக்கு உண்டான ஊதியம் கிடைக்காமல் அல்லாடுகின்றனர். இதற்கு காரணம் மண்ணின் தன்மையை பலர் அறியாமல் இருப்பதும், அந்த மண்ணின் வளத்துக்கேற்றபடி பயிரிடாததுமே காரணம். விவசாயத்தில் மண்ணிற்கு முக்கியப் பணி செடிகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை அளிப்பது. பயிருக்கு 16 வகையான ஊட்டச் சத்துக்கள் தேவை. அதில் மண்ணில் 13 வகையான ஊட்டச்சத்து பயிருக்கு கிடைக்கிறது. மண் பரிசோதனையின் மூலம் எந்தெந்த சத்துகள் எந்த அளவில் மண்ணில் உள்ளது. சத்துக்கள் குறைபாடுகள் இருந்தால் அதை நிவர்த்தி செய்வது குறித்தும் அறிந்து கொள்ள மண் பரிசோதனை அவசியமாகிறது.

குறிப்பாக தழை, மணி, சாம்பல் சத்துக்களின் அளவை கணக்கிட்டு சமச்சீர் உரமளிக்க வேண்டும். நுண்ணூட்டச் சத்துக்களான இரும்பு, கால்சியம், மாங்கனீசு, துத்தநாகம், தாமிரம், போரான், மாலிப்டினம், சல்பர், குளோரின், மக்னீசியம் ஆகியவற்றின் அளவை அறிந்து அதற்கேற்றார் போல் உரமிட்டு மண் வளத்தைப் பாதுகாக்க முடியும். மேலும் மண் பரிசோதனை மூலம் களர்உலர் அமிலத் தன்மையை அறிந்து அதை நீக்குதல், சிறந்த முறையில் உரமிட்டு உரச்செலவை குறைத்தல் போன்றவையும் மண் பரிசோதனையின் முக்கிய அம்சங்களாகும்.

மண் மாதிரி எடுக்கும் முறை: பயிர் அறுவடை செய்த பின்பும், அடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்யும் முன்பும் மண் மாதிரி எடுக்க வேண்டும்.


ஒரு நிலத்தில் மண் வேறு வேறாக இருந்தால் தனித்தனியாக மாதிரி எடுக்க வேண்டும். மேட்டுப்பகுதி, பள்ளப்பகுதி ஆகியவற்றை தனித்தனியாகப் பிரித்து மண் மாதிரி எடுக்க வேண்டும்.

÷1 ஏக்கருக்கு 10 இடங்களில் மண் சேகரிப்பு செய்ய வேண்டும். சேகரித்த மண்ணை சுத்தமான கோணியில் கொட்டி சம பாகமாக கலந்து அதிலிருந்து அரை கிலோ மண்ணை எடுத்து வர வேண்டும். மண் ஈரமாக இருந்தால் நிழலில் உலர்த்தி மாதிரிக்கு எடுக்க வேண்டும். மண் வெட்டிக்கு பதிலாக குச்சியை பயன்படுத்தி மண்ணை எடுக்க வேண்டும்.

மேற்கண்ட முறையில் மாதிரி எடுத்து அந்தந்தப் பகுதிகளில் உள்ள வேளாண் மண் பரிசோதனைக் கூடத்தில் கொடுத்து மண்ணின் தன்மை அறிந்து விவசாயிகள் பயிரிட்டால் அதிக மகசூல் பெறலாம் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**மரவள்ளிப் பயிரை பராமரிக்கும் முறைகள்...**

First Published : 28 Apr 2011 12:26:33 AM IST



பூச்சி தாக்குதலுக்கு உள்ளான மரவள்ளிக்கிழங்கு செடி.

புதுச்சேரி, ஏப். 27: பருவ நிலை மாற்றம் காரணமாக அதிகமான உஷ்ணம் நிலவுகிறது. விவசாயிகள் தொடர்ந்து கோடை மழை பொழியுமா என்று காத்திருக்கிறார்கள்.

இந்நிலையில் மரவள்ளி பயிரிடும் விவசாயிகள் எத்தகைய பராமரிப்பு முறைகளை கையாள வேண்டும் என்பதை விளக்குகிறார் புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் நிபுணர் என். விஜயகுமார்.

அவர் கூறியது: மரவள்ளி நடும்போது நல்ல வளர்ச்சி அடைந்த குச்சியை நட வேண்டும். மரவள்ளிக் குச்சியில் டார்ச் அளவு 33 சதவீதத்துக்கு அதிகமாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படி இருந்தால் பூச்சி தாக்குதல் இருக்காது. குச்சியைப் படுக்க வைத்து நடக்கூடாது. நேராகவும் நடக்கூடாது. சாய்வாக நட வேண்டும். அப்போதான் சாறு உறிஞ்சும் பூச்சுகள் தாக்காது. வைரஸ் நோயும் வராது. விதை கரணைகளை இப்படி தேர்வு செய்து நட்டால் பூச்சி தாக்குதலைக் குறைக்க முடியும். உஷ்ணம் அதிகமாக இருப்பதால் மரவள்ளியில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. உஷ்ணம் அதிகமாக இருப்பதால் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் இனப்பெருக்கம் அதிகமாக இருக்கும். உஷ்ணம் அதிகமாக இருப்பதால் மரவள்ளி வேர்ப்பகுதியில் ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

மரவள்ளி, கிழங்கு வகை பயிர். பணப்பயிரும்கூட. 9 மாதம் வயது உடையது. 3 முதல் 4 மாதம் உள்ள செடிகளில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் குறிப்பாக செஞ்சிலந்தி,மாவு பூச்சி, வெள்ளை ஈ மற்றும் செதில்பூச்சி உள்ளிட்ட பூச்சிகள் தாக்குகின்றன. இந்த எல்லா பூச்சிகளுக்கும் பற்கள் இல்லை. அதனால் மரவள்ளி இலை, தண்டு பாகத்தில் உள்ள சாற்றை உறிஞ்சி உண்ணும் பழக்கம் உடையவையாக இருக்கின்றன.

இதனால் இவை சாறு உறிஞ்சும் பூச்சிகள் என்று அழைக்கப்படுகின்றன. சாறு உறிஞ்சும் பூச்சிகள் சாற்றை உறிஞ்சுவதால் பச்சை நிறத்தில் உள்ள இலைகள் மஞ்சள் நிறத்துக்கு மாறுகிறது. ஒளிசேர்க்கை தடைப்பட்டு மகசூல் பாதிக்கும் நிலை ஏற்படலாம்.

பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள்: வெள்ளை ஈ என்ற பூச்சி மொசைக் வைரஸ் என்ற நச்சு உயிரி நோயைப் பரப்பும். மரவள்ளி வயலில் முதல் 4 இலைகளை மட்டும் வெள்ளை ஈ தாக்கும். கீழ் இருக்கும் எல்லா இலையையும் மாவு பூச்சி தாக்கும்.

செஞ்சிலந்தி தாக்குதல் குறைந்து இருந்தால் டைகோ பால் என்ற மருந்தை 1.5 மி.லி. அளவு எடுத்து 1 லிட்டர் நீரில் கரைத்து அல்லது டெகாசஸ் என்ற மருந்தை 2.5. மி.லி. எடுத்து 1 லிட்டர் நீரில் கரைத்து இலையின் மீது படும்படி மரவள்ளி நடவு செய்த 3, 5, 7 மாதங்களில் தெளிக்க வேண்டும். செஞ்சிலந்தி தாக்குதல் அதிகமாக இருந்தால் புராபர்கைட் 1.5 மி.லி. எடுத்து 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து அதனுடன் 2 கிராம் பெவிஸ்டின் மருந்து 1 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். செஞ்சிலந்தி தாக்குதல் இருந்தால் இலைகள் கீழ்ப்பக்கமாக வளைந்திருக்கும்.

வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த மரவள்ளி வயலைச் சுற்றி மணத்தக்காளி செடி நடலாம். வெள்ளை ஈக்கு அதிகமாகப் பிடித்து மணத்தக்காளி. அந்தச் செட்டியில் ஒட்டிக் கொள்ளும். இது எளிதான வழி. துத்தியும் நடலாம். வெள்ளை ஈ தாக்காத ஒரு மரவள்ளி ரகம் இப்போது வந்துவிட்டது. கோ டிபி4 என்பது அந்த ரகத்தின் பெயர். இது வெள்ளை ஈக்கு எதிர்ப்புத் தன்மை உள்ள ரகம்.

புதுச்சேரி பகுதியில் கேரளம், ரோஸ் மரவள்ளி பயிர்கள்தான் அதிகம் சாகுபடி செய்யப்படுகின்றன. மஞ்சள் வண்ண ஒட்டுப் பொறி 1 ஏக்கருக்கு 40 வரப்பு ஓரங்களில் வைப்பதால் வெள்ளை ஈ கவரப்பட்டு அதில் ஒட்டிக் கொள்ளும்.

வெள்ளை ஈ தாக்குதல் அதிகமாக இருக்கும் வயல்களில் டைமீதோஏத் என்ற மருந்தை 2 மி.லி. எடுத்து 1 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்க வேண்டும். பயிரில் களைகளை அப்புறப்படுத்த வேண்டும்.

மாவு பூச்சியை அழிக்க மீன எண்ணெய் சோப்பு 40 கிராம் எடுத்து 1 லிட்டர் நீரில் கரைத்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். அந்த மாவு பூச்சியின் வெண்மை நிற படலம் கீழே கொட்டிக் கொள்ளும். முசுக்கொட்டை செடி அல்லது பப்பாளி, நெய்வேலி காட்டாமணக்கு வரப்பு ஓரங்களில் வளர்க்க வேண்டும். அதில் மாவு பூச்சி ஒட்டிக் கொள்ளும். தாக்குதல் நிறைய இருந்தால் புரோபனோபாஸ் 2 மி.லி. எடுத்து 1 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

செதில் பூச்சியைக் கட்டுப்படுத்த காஸ்டிக் சோடா 150 கிராம், மரபிசின் 500 கிராம், தண்ணீர் 4 லிட்டர் கலந்து தெளிப்பதால் இதை அழிக்கலாம். செயற்கை தன்மையுள்ள பைரித்திராய்டு மருந்துகளை எந்தக் காரணம் கொண்டும் பயன்படுத்தக் கூடாது.

ஏனென்றால் அவை சாறு உறிஞ்சும் பூச்சுகளை மறு உற்பத்தி செய்யும் திறன் படைத்தவை என்கிறார் விஜயகுமார்.

**மஞ்சள் சாகுபடிக்கு 65% அரசு மானியம்**

First Published : 28 Apr 2011 12:25:00 AM IST



கடலூர் மாவட்டம் அடரியை அடுத்த கொளவாய் கிராமத்தில் அறுவடை செய்யப்பட்டுள்ள மஞ்சள்.

விருத்தாசலம், ஏப். 27: நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் கோமுகி நதி உபவடி நிலப் பகுதி விவசாயிகளுக்கு மஞ்சள் பயிர் சாகுபடிக்கு அரசு 65% மானியமாக வழங்குகிறது.

இதுகுறித்து கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் அருட்செந்தில் தெரிவித்தது:

தமிழகத்தில் உள்ள 63 ஆற்றுப்படுகை பகுதியில் பாசனப் பரப்பை அதிகப்படுத்தும் வகையில் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசு நீர்வள, நிலவள திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

அதன்படி கோமுகி நதி பாயும் கடலூர், விழுப்புரம், சேலம் மாவட்டப் பகுதிகளில் மஞ்சள் உற்பத்தியை அதிகப்படுத்தும் வகையில் அரசு 65 சதவீத மானியம் வழங்குகிறது.

நேர்த்தி முறைகள்: நல்ல வடிகால் வசதியுள்ள, மணற்பாங்கான செம்மண், வண்டல் மண் ஆகியன மஞ்சள் பயிரிட ஏற்ற மண்ணாகும். களர் அல்லது நீர் தேங்கும் மண் நிலங்கள் மஞ்சள் பயிரிடுவதற்கு ஏற்ற மண் அல்ல.

நடவு வயல் தயாரிப்பு முறைகள்: மஞ்சள் பயிரிடும் நிலத்தை உளி கலப்பையால் நன்கு உழவு செய்து இதை தொடர்ந்து சட்டிக் கலப்பை மூலம் உழுது, கொக்கி கலப்பை கொண்டு 3 முறை உழவு செய்யவேண்டும்.

1 ஹெக்டேருக்கு 30 டன்கள் என்ற அளவில் தொழு உரம், சூப்பர் பாஸ்பேட் 281 கிலோ ஆகியவற்றை கலந்து அடி உரமாக இடவேண்டும். அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா இரண்டும் முறையே 10 கிலோ வீதம் 100 கிலோ தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும்.

வேப்பம் பிண்ணாக்கு அல்லது கடலைப் பிண்ணாக்கு ஒரு ஹெக்டேருக்கு 200 கிலோ என்ற அளவிலும், பெரஸ் சல்பேட் 30 கிலோ மற்றும் துத்தநாக சல்பேட் 15 கிலோ என்ற அளவிலும் அடி உரமாக இடுவது சிறப்பானதாகும்.

4 அடி அகலமும், 1 அடி உயரமும் கொண்ட மேட்டுப் பாத்திகளை அமைத்து சொட்டுநீர்ப் பாசன பக்கவாட்டு இணை குழாய்கள் மேட்டுப் பாத்தியின் மையத்தில் இருக்குமாறு வைக்க வேண்டும்.

விதை ஊன்றுதல், நடவு இடைவெளி முறை: மஞ்சள் பயிர் ஒரு ஹெக்டேருக்கு, நன்கு முதிர்ச்சியடைந்த ஆரோக்கியமான நோய்த் தாக்குதல் இல்லாத விதை மஞ்சள் 2,000 கிலோ தேவை. கிழங்குகளை அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா ஒவ்வொன்றும் 10 கிலோ என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யவேண்டும்.

விதை நடுவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பாக கார்பன்டாசிம், 1 கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் நனைத்து பின்பு உலர்த்தி நடவு செய்யவேண்டும். விதை ஊன்றுவதற்கு 8-12 மணி நேரம் முன்பாக மேட்டுப் பாத்திகளை சொட்டுநீர்ப் பாசனம் மூலம் முழுவதுமாக நனைக்க வேண்டும். விதைகளை மேட்டுப்பாத்தியில் 3 வரிசை முறையில் 60ஷ்45ஷ்15 செ.மீ. என்ற இடைவெளியில் 4 செ.மீ. ஆழத்தில் ஊன்ற வேண்டும்.

மஞ்சள் அறுவடை: மஞ்சள் விதைத்த 9-வது மாதம் இலைகள் பழுத்து காய்ந்து மடியத் தொடங்கும்போது அறுவடை செய்ய வேண்டும். 1 ஹெக்டேருக்கு 7முதல் 9 டன்கள் வரை பதப்படுத்தப்பட்ட மஞ்சள் கிடைக்கும்.

இதுகுறித்து மேலும் தகவலுக்கு விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

**இயற்கைச் சூழலில் நாட்டுக் கோழி வளர்ப்பது லாபகரமானது**

First Published : 27 Apr 2011 12:28:12 PM IST

தஞ்சாவூர், ஏப். 26: இயற்கை சூழலில் நாட்டுக் கோழி வளர்ப்பது லாபகரமானது என்றார் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் என். புண்ணியமூர்த்தி.

தஞ்சாவூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் மூலிகை முதலுதவி சிகிச்சை குறித்த பயிற்சி வகுப்பில் அவர் பேசியது:

பகல் நேரங்களில் வெளிமேய்ச்சலும், இரவில் அடைத்து வைத்தும் நாட்டுக் கோழிகளை குறைந்த எண்ணிக்கையில் வளர்ப்பதே அதற்கு இயற்கை வளர்ப்பு சூழலை கொடுக்கும். அதிக எண்ணிக்கையில் நாட்டுக் கோழி வளர்த்து, செயற்கை தீவனத்திற்கு மிகுந்த செலவு செய்வது லாபகரமானது அல்ல. இயற்கையாக நிலங்களில் கிடைக்கும் புளு, பூச்சி, கரையான் உள்ளிட்ட தீவனங்களை உண்டு வளர்வதே நாட்டுக் கோழிக்கு நல்ல வனப்பையும், நோய் தாக்குதலில் இருந்து பாதுகாப்பையும் அளிக்கும்.

வெந்தயம், நவதானியங்களை அதன் மேய்ச்சல் பகுதிகளில் வளர்ப்பது நலன் தரும். கரையான் உற்பத்தியை பெருக்கி அதை நாட்டுக் கோழிகளுக்கு கிடைக்கச் செய்யலாம்.

கோழிகளுக்கு வெள்ளைக் கழிசல் நோய் தாக்கினால் மட்டும் தடுப்பூசி போடுதல் அவசியம். கழிசல், அம்மை போன்ற நோய்களுக்கு மூலிகை மருத்துவம் போதுமானது.

நாட்டுக் கோழிக்கான உள்நாட்டு தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. மூக்கு வெட்டாத நாட்டுக் கோழிக்கு சந்தையில் ரூ. 200 முதல் ரூ. 240 வரை விலை உள்ளது என்றார் புண்ணியமூர்த்தி.

**சிக்கல் வேளாண் நிலையத்தில் காளான் உற்பத்தி பயிற்சி**

First Published : 27 Apr 2011 12:48:53 PM IST

நாகப்பட்டினம், பிப். 26 : நாகை மாவட்டம், சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் காளான் உற்பத்தி தொழில்நுட்பம் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் தங்க. தாமோதரன் தலைமை வகித்து, பயிற்சி முகாமைத் தொடக்கி வைத்துப் பேசியது : அதிகரித்து வரும் புரதச் சத்துத் தேவையை நிறைவு செய்வதில் காளான் முக்கிய பங்கு வகிக்கிறது. உலர்ந்த காளானில் சுமார் 20 முதல் 30 சதம் வரை புரதச் சத்து உள்ளது. இந்தச் சதவீதம், காய்கறி மற்றும் பழங்களில் உள்ள புரத சதத்தை விட அதிகம்.

பண்ணை மகளிர் மற்றும் மகளிர் குழுக்களின் நேரத்தை பயனுள்ள நேரமாக மாற்றி, நல்ல வருமானம் ஈட்டித் தரும் தொழிலாக உள்ளது காளான் உற்பத்தி. மேலும், பல்வேறு உபரி நன்மைகளும் காளான் வளர்ப்பு மூலம் கிடைப்பதால் காளான் உற்பத்திக்கு அனைவரும் முனைப்புக்காட்டலாம் என்றார் தங்க. தாமோதரன்.

இணைப் பேராசிரியர் கோ. மாலதி, காளான் வளர்ப்பு முறைகள் குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளித்தார். பயிற்சி முகாமில் பங்கேற்ற விவசாயிகள், வேளுக்குடியில் உள்ள காளான் வளர்ப்புப் பண்ணைக்குக் கண்டுணர் சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

**உர மானிய திட்டத்தில் பழைய நடைமுறை தேவை**

First Published : 27 Apr 2011 01:04:39 PM IST

திருச்சி, ஏப். 26: விவசாயிகளுக்கான உர மானிய திட்டத்தில் பழைய நடைமுறையைச் செயல்படுத்த வேண்டும் என தமிழ்நாடு விவசாய இடுபொருள் வியாபாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருச்சியில் இந்தச் சங்கத்தின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் மாநிலத் தலைவர் பி. விஜய் நடராஜ் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்: "மத்திய அரசு இப்போது உரங்களை மானிய விலையில் வழங்கி வருகிறது. இந்த உரத்துக்கான மானியத்தை மத்திய அரசு உரம் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு வழங்குகிறது.

இந்த மானியம் நேரடியாக விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் எனக் கருதி சில நடைமுறைகளை கையாள மத்திய அரசு உத்தேசித்துள்ளது.

இதன்படி, வருங்காலங்களில் நிறுவனங்கள் மானியத்தை சேர்த்து மொத்த விலைக்கு மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்வது என்றும், பின்னர், மொத்த வியாபாரியிடமிருந்து சில்லறை வியாபாரி இதேபோல முழு விலையில் கொள்முதல் செய்வது எனவும், இதையடுத்து, சில்லறை வியாபாரிகள் விவசாயிகளுக்கு விற்பனையில் மானியத்தைக் கழித்து காண்பித்து ரசீது போட்டு விற்பனை செய்ய வேண்டும் எனவும், மானிய தொகையை வியாபாரிகள் அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் முந்தைய கொள்கைப்படி, 5 கி.மீ. ஒரு உரக் கடை அமைத்து விவசாயிகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இப்போது சிறிய கிராமங்களிலும் சில்லறை கடைகள் உள்ளன. இந்தக் கடைகளை குறைந்த கல்வியறிவு உள்ளவர்களும், சில இடங்களில் குறைந்த முதலீட்டில் விவசாயிகளும் கடைகளை வைத்துள்ளனர்.

இந்நிலையில், மத்திய அரசின் இந்தத் திட்டத்தால் முதலீடு இப்போது உள்ளதைபோல சுமார் 3 மடங்கு அதிகம் தேவைப்படும். மத்திய அரசின் திட்டத்தால் சிறு வியாபாரியையும் கணினி போன்ற பல ஏற்பாடுகள் செய்ய தனியாக முதலீடு தேவைப்படும். கணினியை இயக்க தனி நபரை நியமிக்க வேண்டும்.

இதனால், பொருளாதார சுமை வியாபாரிகளுக்குக் கூடுதலாகிறது. சிறு வியாபாரிகள் இதை நடைமுறைப்படுத்த முடியாமல் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகும் நிலை ஏற்படும். மேலும், விவசாயிகளுக்கு தேவையான உரங்கள், தேவையான நேரத்தில் கிடைக்காமல் நாட்டின் மொத்த உணவு உற்பத்தியும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்த அளவுக்குச் சிரமங்கள் உள்ளதால், இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதைத் தவிர்த்து முந்தைய திட்டப்படியே நிறுவனங்களுக்கு அவர்களது உற்பத்தி விற்பனைக்கான மானியத்தை வழங்குவது மிகச் சிறந்தது. இந்த விவரங்கள் தொடர்பாக விவசாய இடுபொருள்கள் வியாபாரிகள் சங்கத்தை மத்திய அரசு அழைத்துப் பேசி முடிவு செய்வது சிறந்தது.'

முன்னதாக, சங்கப் பொருளாளர் சி. சண்முகநாதன் வரவேற்றார். செயலர் ஏ.எம். சீதாராமன் நன்றி கூறினார்.

மனைவியை எரிக்க முயன்ற கணவர் கைது

திருச்சி,ஏப். 26: திருச்சியில் மனைவியைத் தீ வைத்து எரிக்க முயன்ற கணவரை போலீஸôர் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

திருச்சி காந்தி சந்தைப் பகுதியைச் சேர்ந்தவர் ராஜ்குமார் (32). அரசு மதுபானக் கடை மது அருந்தும் கூடத்தில் வேலை செய்து வந்தார். இவரது மனைவி தேவி (24). இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

இந்தத் தம்பதியினர் இடையே அடிக்கடி தகராறு ஏற்படுமாம். இந்த நிலையில், திங்கள்கிழமை இரவு இருவருக்குமிடையே மீண்டும் தகராறு ஏற்பட்டதாம். அப்போது, தேவி மீது ராஜ்குமார் மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைக்க முயன்றாராம்.

தேவி எழுப்பிய சப்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் அவரைக் காப்பாற்றினர்.

இதுகுறித்து தேவி அளித்த புகாரின் பேரில், காந்தி சந்தை போலீஸôர் வழக்குப் பதிந்து ராஜ்குமாரைக் கைது செய்தனர்.

**தொடர் மழை: நெல் விலை வீழ்ச்சியால் அமராவதி விவசாயிகள் சோகம்**

First Published : 27 Apr 2011 10:07:51 AM IST

உடுமலை,ஏப்.26: கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் உடுமலை அருகே அறுவடை நிலையில் இருந்த நெல் வயல்கள் மழைநீரில் மூழ்கின. இதனால் விளைச்சல் பாதிப்பு ஏற்பட்டு வருவதுடன் விலை வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளதால் அமராவதி பகுதி விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர்.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் வ ரையில் மூன்று மாவட்டங்களில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆ யக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

இதில் அணையின் கரையோர கிராமங்களான கண்ணாடிப்புத்தூர், மடத்துக்குளம், சோழமாதேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளில் நெல் பயிரிடப்பட்டிருந்தது. கடந்த டிசம்பர் இறுதியில் பயிரிடப்பட்ட நிலையில் ஏப்ரல் இரண்டாவது வாரம் முதல் இந்த கிராமங்களில் நெல் அறுவடை தொடங்கி நடந்து வந்தது.

இந்நிலையில் அமராவதி கரையோர பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது. இந்த மழையில் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் வயல்கள் தண்ணீரில் மூழ்கின. இறுப்பினும் நிலைமைகளை சமாளிப்பதற்காக இரவு பகல் பாராது தேங்கியுள்ள தண்ணீரை நெல் வயல்களில் இருந்து வெளியேற்றி வருகின்றனர் விவசாயிகள்.

இந்நிலையில் நெல் விலை கடும் வீழ்ச்சி அடைந்து வருவதால் விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர். கடந்த 10 நாட்களுக்கு முன் ஒரு சலகை (ஒரு மூட்டைக்கு 120 கிலோ) நெல் விலை ரூ.1200 முதல் 1300 வரை விற்பனையானது. தற்போது பெய்து வரும் மழையால் ஒரு சலகை நெல் விலை ரூ.850 முதல் ரூ.950 வரையே விற்று வருகிறது.

இது குறித்து சோழமாதேவி மற்றும் கடத்தூர் விவசாயிகள் கூறியது:

தொடர்ந்து ஒரு வாரமாக பெய்து வரும் மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கி நி ற்கின்றது. வயல்களில் உள்ள தண்ணீரை வெளியேற்ற கடுமையாக முயற்சி செய்தும் பலனில்லை. மீண்டும் மீண்டும் தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. நெல் மணிகள் நீரில் ஊறி முளைத்து போகும் நிலை ஏற்பட்டு வருகிறது. இந்த பகுதியில் சுமார் 750 ஏக்கரில் நெல் பயிர் முற்றிலும் பாதித்துள்ளது. ஒரு சலகை நெல்லிற்கு ரூ.300 முதல்

ரூ.400 வரை விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. வியாபாரிகள் நெல்லை கொள்முதல் செய்யும்போது ரொக்கம் தர மறுக்கிறார்கள். எனவே விலை நிர்ணயம் செய்து மாநில அரசே தற்காலிக கொள்முதல் நிலையம் அமைத்து நெல்லை எடுத்துக் கொள்ள வே ண்டும் என்றனர்.

**நெல் விலை குறைவு: விவசாயிகள் கவலை**

First Published : 27 Apr 2011 11:52:31 AM IST

திருவாடானை, ஏப். 26: திருவாடானை பகுதியில் நெல் விலை குறைவாக விற்பனை ஆவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தமிழகத்தின் இரண்டாவது நெல் களஞ்சியம் எனப் பெயர் பெற்ற பகுதி திருவாடானை தாலுகா. இங்கு சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் விவசாயம் செய்யப்படுகிறது. கடந்த சம்பா பருவத்தில் விளைந்த நெல், இப்போது மூட்டை ரூ.600-க்கு விற்பனை ஆகிறது. ஆனால் இதற்கு முந்தைய ஆண்டு சம்பா பருவத்தில் மூட்டை ரூ. 1000 என விற்பனை ஆனது. இந்த ஆண்டு நெல் விலை குறைவாக இருப்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயியான ஆதியூர் தம்பிராசா கூறியது:

கடந்த சம்பா பருவத்தில் டீலக்ஸ் பொன்னி ரக நெல் ரூ. 1000-க்கு விற்பனை ஆனது. அப்போது டீலக்ஸ் பொன்னி அரிசி கிலோ ரூ.25 லிருந்து 30 வரை ரகத்திற்கு தகுந்தவாறு விற்பனை ஆனது. ஆனால் இப்போது நெல் மூட்டை ரூ. 600-க்குதான் விற்பனை ஆகிறது.

ஆனால் அரிசி விலை மட்டும் குறையாமல் அதே விலைக்கு விற்கப்படுகிறது. இது இடைத்தரகர் வேலையா என்பது புரியாத புதிராக உள்ளது. எனவே அரசு தனிக் கவனம் செலுத்தி விவசாயிகளின் துயர்நீக்க வேண்டும் என்றார்.

**வேளாண்மையில் மரபணு மாற்று தொழில்நுட்பம் ஆபத்தானது**

First Published : 27 Apr 2011 12:48:16 PM IST

திருவாரூர், ஏப். 26: வேளாண்மையில் மரபணு மாற்றுத் தொழில்நுட்பம் மக்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது என்றார் நமது நெல்லை காப்போம் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் இரா. ஜயராமன்.

வேல்ஸ் பவுண்டேஷன், கிரியேட், ஃபெட்காட், ஒற்றுமை அறக்கட்டளை உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து மரபணு மாற்றுத் தொழில்நுட்பத்துக்கு எதிரான விழிப்புணர்வுக் கருத்தரங்கை அண்மையில் திருவாரூரில் நடத்தின.

இந்த கருத்தரங்கில் ஜயராமன் பேசியது:

மரபணு மாற்றுத் தொழில்நுட்பம் எந்த வகையிலும் நமது நாட்டுக்கு ஏற்புடையதல்ல. மரபணு மாற்றுத் தொழில்நுட்பத்தில் பருத்தி சாகுபடி செய்த மகாராஷ்டிரம், பஞ்சாப், ஆந்திரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் விவசாயிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

மரபணு மாற்று உணவுகள் நஞ்சுள்ளதாகவும், பல்வேறு தீமைகளை கொண்டுள்ளதாலும் அந்த உணவுகளை உண்ணுவது ஆபத்தானது. எனவே அதை தடை செய்ய வேண்டும். மரபணு மாற்றுத் தொழில்நுட்பம் தொடர்பாக நடைபெற்று வரும் களப் பரிசோதனைகளை நிறுத்த வேண்டும். மரபணு மாற்றுத் தொழில்நுட்பத்தின் மூலம் பொருளாதாரப் பயன்களை மட்டும் பார்க்காமல்

மனிதனின் ஆரோக்கியம், உயிர் தொடர்பான பிரச்னையையும் பார்க்க வேண்டும். உயிரி தொழில்நுட்ப ஒழுங்காற்று ஆணையம் விவசாயிகள், நுகர்வோர், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போன்றவர்களின் கருத்துகளையும் கேட்டு, நாடாளுமன்ற நடவடிக்கைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

மரபணு மாற்றுத் தொழில்நுட்பம் தொடர்பாக மண்ணுக்கும், மனித உயிருக்கும் ஏற்படும் தீமைகள் குறித்து அரசு தீவிரமாக

பரிசீலிக்க வேண்டும் என்றார் அவர்.

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வேளாண்மன்றச் சட்டம் 2009-ஐ முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கருத்தரங்கில் பாரதி மக்கள் மன்றத் தலைவர் ஜி. காந்தி, பாலம் தொண்டு நிறுவன இயக்குநர் செந்தில்குமார், தமிழக உழவர் இயக்க நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சதாசிவம், திருத்துறைப்பூண்டி ஒன்றிய அமைப்பாளர் கரிகாலன், நன்னிலம் ஒன்றிய அமைப்பாளர் உத்தமன், பாரதிய கிசான் சங்க ஒருங்கிணைப்பாளர் ராஜேந்திரன், பள்ளத்தூர் முருகையன், தஞ்சாவூர் மாவட்ட இயற்கை உழவர் இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் அன்புச்செல்வன் உள்ளிட்டோர் கருத்துரையாற்றினர்.

**மானிய விலையில் மண்புழு படுக்கை அமைப்பு**

First Published : 27 Apr 2011 03:34:01 PM IST

விழுப்புரம், ஏப். 26: விழுப்புரத்தையடுத்த பிடாகத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் 50 சதவீத மானிய விலையில் மண்புழு படுக்கை அமைப்பை தோட்டக்கலை துணை இயக்குநர் என். பன்னீர்செல்வம் ஆய்வு செய்தார்.

÷இந்த திட்டத்தின்கீழ் கோலியனூர் ஒன்றியம் பிடாகம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி அன்பழகனுக்கு 50 சதவீத மானிய விலையில் மண்புழு படுக்கையை வேளாண்மை உதவி அலுவலர் பரமசிவம் வழங்கினார்.÷மண்புழு படுக்கை அமைப்பை பயன்படுத்தி மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள் குறித்தும், காய்கறி பயிர்களுக்கு மண்புழு உரம் பயன்படுத்துவதால் கிடைக்கும் தரம் குறித்தும், நீடித்த நிலையான வேளாண்மைக்கு மண்புழு உரம் எவ்வாறு உதவி செய்கிறது? என்று உதவி இயக்குநர் முனைவர் க. வீராசாமி விவசாயிக்கு விளக்கினார்.

÷வேளாண்மை உதவி அலுவலர் கலையரசன், விவசாயிகள் அன்பழகன், ராஜசிம்மன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**பருத்தி பருப்பு வகைகள் உற்பத்தி அமோகம்:அரசுகொள்முதலை புறக்கணிக்கும் விவசாயிகள்**

ஏப்ரல் 28,2011,01:47



புதுடில்லி:நடப்பு பயிர் பருவத்தில் பணப்பயிர்களானபருத்தி மற்றும் பருப்பு வகைகளின் உற்பத்தி சாதனை அளவை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவற்றுக்கானதேவை அதிகரித்துள்ளதாலும் நல்ல விலை கிடைப்பதாலும் விவசாயிகள்சு அர" கொள்முதல் நிறுவனங்களை நாடாமல் சந்தையில் விற்றுசு நல்ல அளவில் வருவாய் ஈட்டுகின்றனர். மேலும்இவ்வகை பொருள்களுக்கு அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையை விடசு சந்தை விலை அதிகமாக உள்ளதால் அரசு முகமை அமைப்புகளின் கொள்முதலும் குறைந்துள்ளது.

ஆண்டுதோறும்விதைப்பு பருவம் தொடங்கும்போதுவிவசாயிகளை பாதுகாக்கும்நோக்குடன் விளைபொருள்களுக்கு அரசு குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்கிறது. இதன்படி அரசின் முகமை அமைப்புகளானதேசியவேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு (நாபெட்) இந்திய பருத்தி கழகம் (சி.சி.ஐ.) மற்றும் அந்தந்த மாநிலங்களைச்சேர்ந்த அரசுநிறுவனங்கள் விவசாயிகளிடம் இருந்து விளை பொருள்களைசு அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்து வருகின்றன.

ஆனால், நடப்பு ஆண்டில் பருத்தி பருப்பு வகைகள் ஆகியவற்றின் சந்தை விலைசு அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையை விட அதிகமாக உள்ளதால்பொதுத்துறை நிறுவனங்கள் இவற்றை கொள்முதல் செய்வதை குறைத்துக் கொண்டுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு முகமை அமைப்புகளின் கொள்முதல் படிப்படியாக குறைந்து வருவதாக இத்துறையைச்சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.கடந்த 2008 - 09ம் ஆண்டில் சி.சி.ஐ. 89 லட்சம் பருத்தி பொதிகளை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்தது. இது 2009 -10ம் ஆண் டில் 57.5 லட்சம் பருத்தி பொதிகளாக குறைந்துபோனது.

அதுபோல்மற்றொரு நிறுவனமான நாபெட் கடந்த 2008 - 09ம் ஆண்டில் 33 லட்சம் பருத்தி பொதிகளை கொள்முதல் செய்தது.இந்த கொள்முதல் 2009 - 10ம் ஆண்டில் 5 லட்சம் பொதிகளாக சரிந்தது. நடப்பு 2010 - 11ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவிற்கு கொள் முதல்மேற்கொள்ளப்படவில்லை. ஏனெனில் மொத்த பருத்தி உற்பத்தியில் 90 சதவீதத்தைசு தனியார் நிறுவ னங்களே வாங்கிக் கொள்கின்றன.இவ்வாண்டுசு ஒரு குவிண்டால் பீ.பீ. வகை பருத்திக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை 3சு000 ரூபாய் எனசு அர" நிர்ணயித்துள்ளது.

ஆனால்சு தற்போது சந்தையில் ஒரு குவிண்டால் பீ.பீ. வகை பருத்தி 6,400 ரூபாய்க்கு விலைபோகிறது. இதேபோல் சுதேசி மற்றும் எஸ்.6 பருத்தி வகைகளின் குறைந்தபட்ச ஆதரவு விலை முறையே 2,750 மற்றும் 2,850 ரூபாயாக உள்ளது. ஆனால் இவற்றின் சந்தை விலை முறையே 5 800 மற்றும் 6,850 ரூபாய் என்ற அளவில் உயர்ந்து காணப்படுகிறது.கடந்த 2008ம் ஆண்டு அரசு ஒரு குவிண்டால் பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை 2,200 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக மிகவும் உயர்த்தியது. இது சந்தை விலையை விட அதிகமாக இருந்ததால் விவசாயிகள் அதிக அளவில் அரசு முகமை அமைப்புகளுக்கு பருத்தியை விற்பனை செய்தனர்.

மத்தியவேளாண் அமைச்சகம் விளைபொருள்கள் குறித்த மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டு அறிக்கையைஅண்மையில் வெளியிட்டது. அதில் 2010 -11ம் ஆண்டில் பருத்தி உற்பத்தி 3.39கோடி பொதிகளாக (ஒரு பொதி -170 கிலோ) இருக்கும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. இது, கடந்த 2009-10ம் ஆண்டில் 2.40கோடி பொதிகளாக இருந்தது. பருத் திக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் அதிக அளவில் பருத்தியை பயிர் செய்யத் தொடங்கி யுள் ளனர். இதனால்வரும் பருவத்தில் பருத்தி உற்பத்தி சாதனை அளவாக 4கோடி டன் பொதிகள் என்ற அளவிற்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பருப்பு வகைகளைப் பொறுத்தவரை கடந்த 30 ஆண்டு களுக் கும்மேலாக அரசின் முகமை அமைப்பான நாபெட் மட்டுமே பருப்பு கொள்முதலில் ஈடுபட்டு வருகிறது. இந்த அமைப்பு கடந்த 2009 -10ம் ஆண்டில் 32 ஆயிரத்து 565 டன் பருப்பு வகைகளை கொள்முதல் செய்தது. இது 2010 - 11ம் ஆண்டில் 11 ஆயிரம் டன் என்ற அளவில் குறையும் என மதிப்பிடப் பட்டுள் ளது.நடப்பு 2011 - 12ம் ஆண்டில் பச்சைப்பயிறு பாசிப்பருப்பு உள்ளிட்ட பெரும்பாலான ரபி பருவ பருப்பு வகைகளின் சந்தை விலைசு குறைந்த பட்ச ஆதரவு விலையை விட அதிகமாக உள்ளது.உள்நாட்டில்சு பருப்பு வகைகள் உற்பத்தி 2010 -11ம் ஆண்டில் 1.73கோடி டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2009 -10ம் ஆண்டில் இது 1.46கோடி டன்னாக இருந்தது. நடப்பு ஆண்டில் பருப்பு வகைகளின் உற்பத்தி சாதனை அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும் இவற்றின் விலை குறைய வாய்ப்பில்லை என்று கூறப் படுகிறது.எனினும் இந்த உபரி உற்பத்தி ஆண்டுதோறும் இறக்குமதியாகும் 20 லட்சம் டன் பருப்பு வகைகளை ஈடு செய்யக் கூடியதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. பருத்திபருப்பு வகைகளுக்கு சந்தையில் நல்ல விலை கிடைத்து வருவது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

**எண்ணெய் வித்துக்களுக்கு தட்டுப்பாடுகடலை எண்ணெய் விலை உயர்ந்தது**

ஏப்ரல் 28,2011,01:41



தமிழகத்தில் எண்ணெய் வித்துக்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக கடலை எண்ணெய் உட்படசு அனைத்து வகையான எண்ணெய் வகைகளின் விலைசு கடுமையாக உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் நடப்பாண்டில்எண்ணெய் வித்துக்களின் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில்ஆந்திரா கர்நாடகா மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு வரும் எண்ணெய் வித்துக்களின் வரத்து முற்றிலும் நின்று விட்டது.தமிழகத்தில் குறைந்த அளவில் விளைந்த சூரியகாந்தி எள்கொப்பரை தேங்காய்நிலக்கடலை ஆகிய எண்ணெய் வித்துக்களை வடமாநில மற்றும் ஆந்திர வியாபாரிகள்அதிக விலை கொடுத்து வாங்கிச் சென்று விட்டனர். தமிழக எண்ணெய் மில்களுக்கு தேவையான நிலக்கடலை சூரியகாந்தி விதை கிடைக்கவில்லை. மேலும் மார்க்கெட்டில் ஏற்பட்டுள்ள கடும் தட்டுப்பாடு காரணமாக முன் எப்போதும் இல்லாத அளவில் விலை உயர்வு ஏற்பட்டு வருகிறது.

தமிழகத்தில் நிலக்கடலை சூரிய காந்தி எண்ணெய் விலை சில மாதங்களாக தினம் ஓர் விலை ஏற்றத்தை சந்தித்து வருகின்றன. கடந்த வாரம் வரை லிட்டர்சு 80 ரூபாய்க்கு விற்ற கடலை எண்ணெய் தற்போது 88 ரூபாய்க்கு விற்கிறது. இதே போல் 1,200 ரூபாய்க்கு விற்கப்பட்ட15 லிட்டர் கொள்ளளவு கொண்ட கடலை எண்ணெய் டின் 1,320 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 88 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய்தற்போது96 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

15 லிட்டர் டின் 1,440 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மாதம் சூரிய காந்தி எண்ணெய் லிட்டருக்கு ஏழு ரூபாய் அதிகரித்து 77 ரூபாயாக உயர்ந்தது. இதே போல் 15 லிட்டர் டின் 1,050 ரூபாய்க்கு விற்றது 1,155 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. - நமது சிறப்பு நிருபர் -

**மழை பெய்ததால் மானாவாரி சாகுபடி துவங்கியது**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 28,2011,02:55 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சியில் சித்திரை பட்டத்தில் மழை பெய்துள்ளதால், மானாவாரி சாகுபடி விவசாயிகள் நிலத்தை உழுது சாகுபடிக்கு தயார் செய்து வருகின்றனர். இந்நிலையில் விவசாயிகளுக்கு தேவையான பயிறு வகைகளின் விதைகள் மானிய விலையில் வேளாண் துறை மூலம் விற்பனை செய்யப்படுகிறது. பொள்ளாச்சி தாலுகாவில் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியத்தில் தென்னை சாகுபடி பரப்பு அதிகம் இருந்தாலும், மானாவாரி விவசாய பகுதிகளும் அதிகம் உள்ளது.

பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தில் மொத்தம் 14,611 ஹெக்டர் விவசாய நிலப்பரப்பு உள்ளது. அதில், 9,500 ஹெக்டரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 5,111 ஹெக்டர் பரப்பில் மற்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. தெற்கு ஒன்றியத்தில் சோளம் 1,250 ஏக்கரிலும், தட்டை மற்றும் உளுந்து ஆயிரம் ஏக்கரிலும், நிலக்கடலை 500 ஏக்கரிலும் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு தேவையான தட்டை, உளுந்து பயிர் விதைகள் 50 சதவீத மானியத்தில் தெற்கு ஒன்றிய வேளாண் அலுவலகத்தில் வழங்கப்படுகிறது. பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் 22 ஆயிரம் ஹெக்டரில் விளைநிலம் உள்ளது. அதில், 15 ஆயிரம் ஹெக்டரில் தென்னை சாகுபடி உள்ளது.

மீதமுள்ள பரப்பில் நிலக்கடலை, சோளம், பயிறு வகைகள் மற்றும் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. வடக்கு ஒன்றியத்தில் சோளம் 2,100 ஹெக்டரிலும், தட்டை, உளுந்து பயிர்கள் 700 ஹெக்டரிலும், நிலக்கடலை 1,500 ஹெக்டரிலும், பருத்தி 300 ஹெக்டரிலும் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு தேவையான உளுந்து வடக்கு ஒன்றியத்தில் இரண்டு டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ உளுந்து விதை 80 ரூபாயில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மேலும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் பசுந்தாள் உரமான சணப்பை பயிர் விதைகள் விற்கப்படுகிறது.

வேளாண் அதிகாரிகள் கூறுகையில், "பொள்ளாச்சி பகுதியில் கடந்தாண்டு ஏப்ரல் மாதம் 85 மி.மீ., மழை பெய்துள்ளது. ஆனால் இந்தாண்டு ஏப்ரலில் 140 மி.மீ., மழையளவு பதிவாகியுள்ளது. தற்போது பெய்த மழைக்கு விவசாயிகள் நிலத்தை உழுது தயார் படுத்தியுள்ளனர். மே மாதம் முதல் வாரத்தில் மீண்டும் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அப்போது விவசாயிகள் விதைப்பு செய்தால் அடுத்தடுத்து பெய்யும் மழைகளால் முளைப்பு திறன் அதிகரிக்கும். விவசாயிகளுக்கும் அதிக மகசூல் கிடைக்கும்' என்றனர்.

**கொள்முதல் நிலையத்தில் முளைவிடும் நெல் மணிகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 28,2011,03:36 IST

மேலூர்:கோடை மழையால்கொள்முதல் செய்யப்படாத நெல் முளைவிட்டு, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.மேலூர் பகுதியில் அறுவடை காலத்தில் அரசின் சார்பில் பல இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. தெற்குதெரு கிராமத்தில் திறக்கப்பட்ட நிலையத்தில் ஆரம்பம் முதலே அலுவலர்களால் பிரச்சனை இருந்து வந்தது.தேர்தலுக்கு முன்பே நெல் கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டது. இருந்தபோதிலும் தொடர்ந்து நெல் மூடைகளை கொண்டு வந்த விவசாயிகள் அவற்றை, அங்கேயே தார்பாயால் மூடி வைத்துள்ளனர். இந்தவகையில் ஆயிரத்திற்கும் மேலான நெல் மூடைகள் எடை போடாமல் காத்திருக்கின்றன.

தற்போது அவ்வப்போது கோடை மழை பெய்து வருகிறது. மழையால் நெல்மூடைகள் நனைந்து விட்டன. இதனால் நெல் மணிகள் முளைவிட துவங்கிவிட்டது. இது
விவசாயிகளுக்கு பெரும்நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. கொள்முதல் செய்த நெல்லும் இதே கதியில் இருப்பதால் அரசுக்கும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நெல்கொள்முதல் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இங்கு பணியில் இருந்த லோடுமேன்களுக்கும் கடந்த 20 நாட்களாக சம்பளம் கிடைக்கவில்லை.தமராக்கியை சேர்ந்த விவசாயி கணேசன் கூறுகையில், ""ஒருமாதத்திற்கு முன்பு 40 மூடை நெல் கொண்டு வந்தேன். இது வரை எடை போடவில்லை. மூடைகள் மழையில் நனைந்ததால், நெல்லை உலர்த்தி
மீண்டும் மூடையாக்கி அடுக்கி வைத்துள்ளேன். இது வரை மூன்று முறை
இவ்வாறுசெய்துள்ளேன். இதற்கென செலவு செய்தே நெல்லை பாதுகாக்கிறேன். எப்போது எடை போட்டு பணம் தருவர் என்று தெரியவில்லை," என்றார்.நரசிங்கம்பட்டி முருகேசன்கூறுகையில், ""தேர்தல் துவங்கும் முன்பே 129 நெல் மூடை எடை
போடப்பட்டது. ஆனால் இது வரை பணம் தரவில்லை. கடந்த 4 நாட்களாக தினசரி பணத்தை கொண்டு வருவதும், பின்பு கொண்டு செல்வதுமாகவே உள்ளனர். இது குறித்து உயரதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்துள்ளோம்," என்றார்.கொள்முதல் நிலையத்தில் நெல்லை பாதுகாக்க கிழிந்த, பழைய தார்ப்பாய்கள் விவசாயி
களுக்கு வழங்கப்படுகிறது. இது போதுமானது இல்லை. இந்நிலை தொடர்ந்தால் நெல் மூடைகள் பயனற்று போகும் அபாயம் உள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் இவற்றை கவனிக்க வேண்டும்.

**குறுகிய கால பயிறுகளை பயிரிடவேளாண் அதிகாரி வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 28,2011,03:22 IST

ஆலங்குளம்:கோடை மழையை பயன்படுத்தி குறுகிய கால பயிறு வகைகளை விவசாயிகள் பயிரிடுமாறு ஆலங்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் கூறியுள்ளார். இதுகுறித்து ஆலங்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் சீனிரவீந்திரபாண்டியன் தெரிவித்ததாவது:-ஆலங்குளம் வட்டாரத்தில் தற்போது பரவலாக கோடை மழை பெய்துள்ளது. இதை பயன்படுத்தி குறுகிய கால பயிர்களான உளுந்து, தட்டைப்பயறு, சிறு தானியங்கள் ஆகியவற்றை விவசாயிகள் பயிரிடலாம். மேலும் மண் பரிசோதனை செய்து பரிந்துரையின்படி உரமிட்டு உரச்செலவை குறைக்கலாம். மண் பரிசோதனை செய்ய அந்தந்த பகுதி வேளாண்மை உதவி அலுவலர்கள், ஆலங்குளம், ஊத்துமலை வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**குமிழ் மரக்கன்று வளர்க்க வனத்துறையில் பெயர் பதிவு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,21:33 IST

பழநி : வனத்துறை சார்பில் இலவசமாக வழங்கப்பட உள்ள தேக்கு, குமிழ் மரக்கன்றுகள் பெறுவதற்கான பெயர் பதிவு துவங்கியுள்ளது. தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும் வனத்துறை சார்பில் மரக்கன்றுகள் வழங்கப்படுவது வழக்கம். ஒரு ஆண்டு முடிந்தபின், இவற்றின் பராமரிப்பிற்கேற், தலா ஒரு மரக்கன்றுக்கு ஐந்து ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும். கடந்தாண்டு பழநி வனப்பகுதியில் வளர்க்கப்பட்ட மரக்கன்றுகளுக்கு, இதுவரை ஊக்கத்தொகை வழங்கவில்லை. இந்நிலையில் இந்தாண்டு தேக்கு, குமிழ் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

ரேஞ்சர் தர்மராஜ் கூறுகையில், ""கடந்தாண்டு வழங்கப்பட்ட மரக்கன்றுகளுக்கான ஊக்கத்தொகை, தேர்தல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஓரிரு வாரங்களில் இத்தொகை வழங்கப்படும். இந்தாண்டு ஏக்கருக்கு 200 கன்றுகள் வீதம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நிலத்தின் பட்டா, வி.ஏ.ஓ., சான்றிதழ் ஆகியவற்றை கொண்டு வரவேண்டும். பெயர் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு, விரைவில் கன்றுகள் வழங்கப்படும்,'' என்றார்.

**மழையால் பதனீர் உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,22:10 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவண்ணாமலை, மம்சாபுரம் போன்ற பகுதிகளில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பனை மரங்கள் உள்ளன. தற்போது பதனீர் சீசன் துவங்கி உள்ளது. கடந்த இரு நாட்களாக பெய்து வரும் மழையால் பனை மரத்தில் ஏற முடியாத நிலை உள்ளது. மேலும் பதனீர் பானைகளில் மழைநீர் கலந்துள்ளதால் அதை எடுக்க முடியாத நிலையும் உள்ளது. இதுகுறித்து விவசாயி மாரிச்சாமி கூறியதாவது: தற்போது மழை பெய்து வருவதால் தினமும்

இருமுறை சீவி விடப்பட்ட இளம் பாளைகள் தற்போது முற்றி விடும். பதனீர் உற்பத்தி குறையும். மேலும் புதிய பாளைகள் வர இன்னும் ஒரு வாரமாகும். அதுவரை பதனீர் உற்பத்தி செய்ய முடியாது, என்றார்.

**தொடர் மழை எதிரொலி கால்நடை பாதிப்பு அபாயம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,21:35 IST

திண்டுக்கல் : தொடர் மழை எதிரொலியாக கால்நடைகள் மீது கவனம் செலுத்த உள்ளாட்சிகளுக்கு கால்நடைத்துறை எச்சரித்துள்ளது. கால்நடைதுறை மண்டல இணை இயக்குனர் இன்பசேகரன் கூறுகையில்,"கால்நடைகளுக்கு திடீர் நோய் தாக்குதல் ஏற்பட்டால் சிகிச்சை தர போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கால்நடை மருந்தகங்களில் தேவையான மருந்து கையிருப்பில் உள்ளது. உள்ளாட்சி நிர்வாகத்தினர் தங்கள் பகுதியில் கால்நடைகள் பாதிக்கப்பட்டால் உடனடியாக மருந்தகத்தை தொடர்பு கொள்ள ஆலோசனை வழங்க வேண்டும்,"என்றார்.

**பச்சை மிளகாய் விளைச்சல் அமோகம் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,23:47 IST

பண்ருட்டி : கோடை மழையால் மிளகாய் விளைச்சல் அமோகமாக விளைந்துள்ளதாலும், விலை உயர்வாலும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கோடை மழையால் கடந்த சில தினங்களாக ஊட்டியில் இருப்பது போன்ற சூழ்நிலை நிலவுவதால் பொதுமக்கள் தற்போது மகிழ்ச்சியில் உள்ளனர். அதுபோல் பண்ருட்டி அடுத்த அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் அதிகளவில் தோட்டப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.

தற்போது பெய்த கோடை மழையால் பச்சை மிளகாய் உற்பத்தி அதிகரிக்கத் துவங்கியுள்ளது. இதனால் 60 சென்ட் நிலத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை 2,000 கிலோ மிளகாய் அளவில் உற்பத்தியாகியுள்ளது. தண்ணீர் பற்றாக்குறையால் உற்பத்தி கூடியதும், வெளியூர் மார்க்கெட்டில் இருந்து பச்சை மிளகாய் வரத்து குறைந்ததால் கடந்த வாரம் ஒரு கிலோ 7 ரூபாய்க்கு விற்றது. நேற்று முன்தினம் ஒரு கிலோ 12 ரூபாயாக உயர்ந்தது.

கோடை மழையால் மிளகாய் உற்பத்தி அதிகரிப்பு, விலை உயர்வால் மகிழ்ச்சியடைந்தாலும், தொடர்ந்து மழை பெய்தால் மிளகாய் செடியில் உள்ள பூக்கள் கொட்டி உற்பத்தி பெருமளவில் குறையும் அபாய நிலை உள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இதுபோல் மழையால் வெண்டைக்காய் செடிகளில் அதிகளவில் பூக்கள் வைத்து காய்கள் காய்க்கத் துவங்கியுள்ளது.

## உணவு பொருள்கள் விலை உயர்வால் ஏழைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆசிய மேம்பாட்டு வங்கி மதிப்பீடு



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உணவுப் பொருள்கள் மற்றும் கச்சா எண்ணெய் விலை உயர்வால், இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் வறுமை கோட்டுக்கு கீழ் வசிப்பவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகரிக்கும் என ஆசிய மேம்பாட்டு வங்கி (ஏ.டீ.பீ) தெரிவித்துள்ளது.*

*இரண்டு மாதங்களில்...*

*இவ்வாண்டின் முதல் இரண்டு மாதங்களில் ஆசியாவில் உணவு பொருள்கள் விலை 10 சதவீதம் உயர்ந்துள்ளது. சர்வதேச அளவில் இது 30 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*உணவு பொருள்கள் விலை 10 சதவீதம் உயரும் நிலையில், ஆசியாவில் புதிதாக 6.40 கோடி பேரும், நம் நாட்டில் 3 கோடி பேரும் வறுமை கோட்டிற்கு கீழ் தள்ளப்படுவார்கள் என்று ஏ.டீ.பீ. மதிப்பீடு செய்துள்ளது.*

*ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் வறுமை கோட்டிற்கு கீழ் வசிப்பவர்கள் விகிதம் 37.2 சதவீதமாக இருந்தது. இது, கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டில் 32 சதவீதமாக குறைந்துள்ளது என்று மத்திய திட்டக்குழு அண்மையில் தெரிவித்துள்ளது.*

*இந்நிலையில், உணவு பொருள்கள் விலை உயர்வால் வறுமையில் வாடுபவர்கள் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்ற அச்சப்பாடு நிலவி வருகிறது. உணவு பொருள்கள் விலை மேலும் 10 சதவீதம் உயரும் நிலையில், வறுமையின் பிடியில்*

சிக்குபவர்கள் எண்ணிக்கை 1.9 சதவீதம் உயரும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உணவு பொருள் விலை உயர்வு குறித்து ஆசிய மேம்பாட்டு வங்கியின் தலைமை பொருளியல் வல்லுனர் சேஞ்ச்யாங் ரீ கூறும்போது, “ஆசிய நாடுகளில் வசிக்கும் மக்கள் அவர்கள் வருமானத்தில் 60 சதவீதத்தை உணவுக்காக செலவிடுகின்றனர். இந்நிலையில், உணவு பொருள்கள் விலை மேலும் அதிகரித்தால், மருத்துவச் செலவு, குழந்தைகளின் கல்வி போன்றவற்றிற்கு அதிக நிதி ஒதுக்க முடியாத நிலை உருவாகி பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படும்” என்று தெரிவித்துள்ளார்.

ஒரு நாள் வருமானம்

உலக வங்கி மதிப்பீட்டின்படி, நாள் ஒன்றிற்கு 1.25 டாலர் (சுமார் ரூ.56) வருமானம் ஈட்டுபவர்கள் வறுமை கோட்டிற்கு கீழ் வசிப்பவர்களாக கருதப்படுகின்றனர். பணவீக்கத்தை கட்டுப்படுத்த தவறினால், ஓவர் ஹீட்டிங்’ எனப்படும் எல்லை மீறிய பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும் என பன்னாட்டு நிதியமும் அண்மையில் தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது. சென்ற மார்ச் மாதத்தில் சர்வதேச சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை கடந்த 31 மாதங்களில் இல்லாத அளவிற்கு மிகவும் உயர்ந்துள்ளது. சர்வதேச அளவில் கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய், பால் பொருள்கள், இறைச்சி விலை அதிகரித்து வருகிறது. அமெரிக்க டாலர் மதிப்பு சரிவாலும், தங்கம், வெள்ளி விலை உயர்ந்து வருகிறது. பல நாடுகள் உணவு பொருள்கள் ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளன. இதுபோன்ற காரணங்களால் பணவீக்கம் அதிகரித்து வருகிறது.

தன்னிறைவு

உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நாடுகள், பற்றாக்குறையால் தவிக்கும் நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும் என ஏ.டீ.பீ. தெரிவித்துள்ளது. இந்தியா, சீனா, இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகள் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை உயர்த்தி வருகின்றன. இதனால், எதிர்பார்த்த அளவிற்கு பலன் கிடைக்காது என்றும், உணவு தானியங்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் எனவும் ஆசிய மேம்பாட்டு வங்கி ஆலோசனை தெரிவித்துள்ளது.

## பச்சை தேயிலை விலை வீழ்ச்சியால் விவசாயிகள் விரக்தி

குன்னூர் ஏப்.28–

பச்சை தேயிலை விலை வீழ்ச்சியினால் விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

கூட்டுறவு தொழிற்சாலைகள்

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் தேயிலை சிறு விவசாயிகள் உள்ளனர். இவர்கள் மாவட்டத்தில் உள்ள 150–க்கும் மேற்பட்ட சிறு தேயிலை தொழிற் சாலை களுக்கும், 14 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை களுக்கும் பச்சை தேயிலையை வினியோகம் செய்து வருகிறார் கள்.

பச்சை தேயிலை வினியோ கம் செய்யும் சிறு தேயிலை விவசாயிகளுக்கு தேயிலை தொழிற்சாலைகள் வார விலையாகவும், மாத விலை யாகவும் இரு விலை வழங்கி வருகிறார்கள்.

வார விலை

வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் நடை பெறும் தேயிலை ஏலத்தில் விற்பனையாகும் விற்பனை விலையை கருத்தில் கொண்டு வார விலை நிர்ணயம் செய்யப் படுகிறது. இந்த வார விலை, மாத விலையில் இருந்து மாறு பட்டு உள்ளது. கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள விவசாயிகள் வார விலையை பெற்று வரு கிறார்கள்.

கடந்த 2 ஆண்டுகளாக பச்சை தேயிலைக்கு ஓரளவு விலை கிடைத்து வந்தது.ஆனால் இந்த ஆண்டு தொடங்கி கடந்த 4 மாதங் களாக தேயிலை ஏல மையத் தில் தேயிலை தூளுக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது.

இதற்கு வட ஆசியா நாடுகளில் ஏற்பட்டு உள்ள அரசியல் குழப்பமே காரணம் என்று கூறப்படுகிறது. ஏனெனில் தென்னிந்திய தேயிலை தூளை குறிப்பாக நீலகிரியில் உற்பத்தி யாகும் தேயிலை தூளை எகிப்து, ஏமன் போன்ற நாடுகள் இறக்குமதி செய்து வருகின்றன.

குழப்பம்

இந்த நாடுகளில் தற்போது அரசியல் குழப்பம் நிலவி வருவதால், தேயிலை தூள் ஏற்றுமதி பெருமளவு பாதிக்கப் பட்டு உள்ளது. இதன் தாக்கம் பச்சை தேயிலை விலை நிர்ணயத்திலும் எதிரொலிக் கிறது. வாரா வாரம் பச்சை தேயிலைக்கு 50 பைசா முதல் 1 ரூபாய் வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற விற்பனை எண் 16–க்கான ஏலத்தில் 49 சதவீத தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்தது.இதனால் தேயிலை தூளுக்கு 3 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

விரக்தி

இதன் காரணமாக கடந்த 23–ந் தேதி வார விலையாக ரூ.8.50–ம், 8 ரூபாயும் வார விலையாக வழங்கப்பட்டு உள்ளது. வாரா வாரம் பச்சை தேயிலை விலை வீழ்ச்சி அடைந்து வருவதால் சிறு தேயிலை விவசாயிகள் மத்தியில் விரக்தி நிலவி வருகிறது.

# வேளாண்மை செய்திகள்



## கால்நடைகளின் பால் உற்பத்தியை அதிகரிக்கும் கிளைரிசிடியா—பசுந்தீவனம்

கிளைரிசிடியா என்ற பசுந்தீவனம், விவசாயிகளால் பரவலாக பயிரிடப்படும் பயிறுவகை தீவனமாகும். மத்திய அமெரிக்காவில் இருந்து உலகெங்கும் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த தீவனபயிர் முள் அற்றதும் அடர்ந்து வளரக்கூடியதாகும். தமிழ்நாடில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு பசுந்தாள் உரப்பயிராக அறிமுகம் செய்யப்பட்டது. இந்த மரத்தில் இருந்து கிடைக்கும் தீவனத்தில் சுபாபுல், சவுண்டல், குதிரை மசாலைவிட அதிக புரதச்சத்து மற்றும் அமினோ அமிலங்கள் கொண்டதாகும். மேலும் கடலை புண்ணாக்கு, பருத்தி விதை, நெல் உமி ஆகியற்றோடு ஒப்பிடக்கூடிய அளவிலான சத்துக்கள் இதில் உள்ளன. வைட்டமின் ஏ, கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிவை அதிக அளவில் காணப்படுவதால் கால்நடைகளுக்கு அடர் தீவனத்துக்கு பதிலாக அளிக்கலாம்.

### பண்புகள்

இதன் இலைகளை கறவை மாடுகளுக்கு கொடுப்பதன் மூலம் பால் உற்பத்தி கணிசமான அளவு அதிகரிக்கிறது. வெண்ணெயில் உள்ள கொழுப்பு சத்தின் அளவை குறைக்கிறது. இதை உண்ணும் கன்றுக் குட்டிகளின் எடை கணிசமாக அதிகரிக்கிறது. இதன் வாயிலாக கறவை மாடுகளுக்கு 10 கிலோ கிளைரிசிடியா பசுந்தீவனத்தை கொடுக்கலாம்.

மேலும் செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வரை கொடுக்கலாம். இந்த இலைகளை காயவைத்து கொடுப்பதன் மூலம் கால்நடைகள் அதிக அளவில் விரும்பி சாப்பிடும்.

### குத்து செடியாக

இந்த பசுந்தீவனத்தில் 19 சதம் புரதச்சத்து இருக்கிறது. இதை தவிர 2 சதம் கொழுப்பு சத்து, 27 சதம் நார்ச்சத்து, 14 சதம் தாது உப்புகள் அடங்கி உள்ளன. மண்ணில் ஆழமாக வேரூன்றி வளர்ந்து காற்றில் உள்ள தழைச் சத்தை மண்ணில் நிலை நிறுத்தும் தன்மை கொண்டது. 10 மீட்டர் உயரத்துக்கு வளரக் கூடியது. பொதுவாக விவசாயிகள் இந்த பயிரை குத்துச் செடியாக வேலிகளில் வளர்க்கிறார்கள்.

இதன் முதிர்ந்த் தண்டுகளை பதியம் போட்டு நடவு செய்யலாம். நடவு செய்த ஒரு வருடத்தில் அறுவடை செய்யலாம். இறவை பட்டத்தில் 2 மாதங்களுக்கு ஒரு முறையும், மானாவாரியில் 3 மாதங்களுக்கு ஒரு முறையும் அடுத்தடுத்து அறுவடை செய்யலாம். அமில நிலங்களிலும் வறட்சியை தாங்கி வளரும் இந்த தீவனப்பயிர் 1,000 மீட்டர் உயரம் வரையிலும் வளரக்கூடியது.

### நிழலுக்காக....

ஆசியாவின் பல நாடுகளிலும், தேயிலைத் தோட்டங்களிலும் நெல் வயல்களிலும் நிழலுக்காக வளர்க்கப்படுகிறது. மழைக் காலங்களில் 1 அல்லது 2 மீட்டர் நீளம் உள்ள 6 மாதம் முதிர்ந்த குச்சிகளை கொண்டு நடவு செய்யலாம். 6 வாரத்துக்குள் நன்கு வேர் பிடித்து 4 முதல் 5 வாரங்களில் வேர் முடிச்சுகள் உருவாகும். நன்கு வளர்ந்த 5 வருட மரங்களில் இருந்து 3 மாதத்துக்கு ஒரு முறை எக்டேருக்கு 10 டன் இலைகளை அறுவடை செய்யலாம்.

இதன் பூக்களில் இருந்து தேனீக்கள் மகரந்தத்தை எடுத்து மகரந்த சேர்க்கைக்கு உதவுகின்றன. இதனுடைய பூக்கள் சமைத்து உண்பதற்கும், மருத்துவத்திலும் பயன்படுகிறது. இந்த பயிர் தரிசு நிலங்களில் நன்கு வளரும். மண் அரிப்பினால் அமில நிலங்களாக மாறிய மண் வகைகளுக்கு ஏற்றது.

**தகவல்:-பேராசிரியர்கள் பாக்கியவதி, விஜயகுமார்**, மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, வேளாண் பல்கலைக்கழகம், கோவை.

---

ஒரு ஏக்கர் நிலத்தில் 25 ஆண்டுகளில்

## ரூ.25 லட்சம் வருமானம் தரும் தேக்கு சாகுபடி



**தேக்கு** மரம் பலம் உள்ள பலகை மட்டுமல்ல, பலமான வருமானத்தையும் கொடுக்கும் மரமாகும். நல்ல மண்வளமும், முறையான பராமரிப்பும் இருந்தால் ஒரு எக்கரில் இருந்து 25 ஆண்டுகளில் ரூ.25 லட்சம் சம்பாதிக்க முடியும். பராமரிப்புக்காக அதிகம் செலவிடத் தேவையில்லை. இதன் இலைகளை ஆடு,மாடு சாப்பிடாது. மேலும் பூச்சி நோய் தாக்குதல் இருக்காது. முறையான பாசனம் கொடுத்து 6 அடிக்கு மேல் வளர்த்துவிட்டால் தேக்கு மரம் தன்னைதானே பராமரித்துக் கொள்ளும்.

### நல்ல வடிகால் வசதி

பல இடங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் வளர்ச்சி இல்லாமல் காணப்படும் தேக்கு மரத்துக்கு குறைவான மண்சத்து மற்றும் சிறந்த வடிகால் வசதி இல்லாததே காரணம் ஆகும். இந்த தேக்கு மரத்தை நல்ல வடிகால் வசதி உள்ள ஆற்று வண்டல் மண் மற்றும் மணற்பாங்கான செம்மண் நிலங்களில் நன்றாக வளரும். இதற்காக தேர்வு செய்யும் நிலத்தை நன்றாக உழவு செய்து கொள்ள வேண்டும். மழைக் காலத்துக்கு முன்னரே 6 அடிக்கு 6 அடி இடைவெளியில் 2 அடி நீள அகல ஆழத்தில் குழி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த குழியில் தேக்கு கன்றுகளை ஆழமாக நடவு செய்ய வேண்டும்.

### சொட்டுநீர் பாசனம்

ஒவ்வொரு குழியிலும், முக்கால் பாகத்துக்கு மக்கிய தொழு உரத்தை வண்டல் மண்ணுடன் கலந்து இட வேண்டும். மீதம் உள்ள குழிகளை மேல் மண்ணை கொண்டு மூடி விட வேண்டும். இப்படி நடவு செய்தால் ஏக்கருக்கு 1,000 கன்றுகள் வரை தேவைப்படும். நட்ட மூன்று மாதம் வரை, வாரம் ஒரு முறை, அதன் பிறகு 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

சொட்டுநீர் பாசனம் அமைத்தால் நல்ல மகசூல் கிடைக்கும். நடவு செய்த ஒரு மாதத்துக்கு பிறகு செடியைச் சுற்றி களை எடுத்து மண் அணைத்து விட வேண்டும். வேகமாக வளர வேண்டும் என்பதற்காக அடிக்கடி கவாத்து செய்யக் கூடாது. இவ்வாறு செய்தால் ஒளிச் சேர்க்கை நடப்பது தடை பட்டு மரத்தின் வளர்ச்சி குன்றி விடும்.

### அறுவடை

இவ்வாறு வளர்ந்த தேக்கு மரங்கள் தரமானதாகவும், பக்க கிளைகள் இல்லாததாகவும் வளர்ந்தால் தான் அதிக வருமானம் கிடைக்கும். இதற்காக பக்க கிளைகளை தரை மட்டத்தில் இருந்து மரத்தில் உயரத்தில் 3—ல் ஒரு பங்கு உயரத்தில் உள்ள கிளைகளை மட்டுமே வெட்ட வேண்டும். இந்த மரங்கள் அடர்த்தியாக வளரும் போது மரம் பெருக்காது.

இதற்காக நடவு செய்ததில் இருந்து 7—ம் ஆண்டு குறுக்கு வரிசையில் ஒரு வரிசை விட்டு ஒரு வரிசையில் உள்ள மரங்களை அறுவடை செய்ய வேண்டும். இப்படி செய்தால் 500 மரங்கள் கிடைக்கும். மீதம் இருக்கும் 500 மரங்களை 12—ம் ஆண்டில் நேர் வரிசையில் ஒரு மரம் விட்டு ஒரு மரம் அறுவடை செய்ய வேண்டும். இப்போது மீதம் 250 மரங்கள் இருக்கும். இந்த மரங்களை சுமார் 20 முதல் 25 ஆண்டுகள் வரை வளர்த்து அறுவடை செய்யலாம். இதை சரிவர கடைப்பிடித்து வந்தால் நல்ல மகசூல் கிடைக்கும்.

### 7,12,25 ஆண்டுகளில்....

7—ம் ஆண்டு அறுவடையின் போது தலா ரூ.500 வீதம் 500 மரங்களுக்கு ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் கிடைக்கும். 12—ம் ஆண்டு அறுவடையின் போது 250 மரங்களுக்கு ரூ.3,000 வீதம் ரூ.7 லட்சத்து 50 ஆயிரமும் கிடைக்கும். முடிவில் 25 ஆண்டுவரை வளரும் தேக்கு மரங்களுக்கு ஒரு மரத்துக்கு ரூ.6 ஆயிரம் வீதம் ரூ.15 லட்சம் வருமானம் கிடைக்கும். ஆக ஒரு எக்கரில் 25 ஆண்டுகளில் ரூ.25 லட்சம் வருமானம் கிடைக்கும். இந்த வருமானம் ஒரு தோராய மதிப்பீடாகும். இதே சமயம் நல்ல மண்வளம், முறையான பராமரிப்பு உள்ள நிலங்களில் வளரும் தேக்கு மரத்தில் மட்டுமே இந்த வருமானம் கிடைக்கும்.

மேலும் வனத்துறை பரிந்துரை செய்யும் சாகுபடி முறையில் சில விவசாயிகள் தேக்கு மரத்தை வரப்பு ஓரங்களில் நடவு செய்கிறார்கள். இந்த மரத்துக்கு அதிக ஒளிச்சேர்க்கை தேவைப்படும் என்பதால் வரப்புகளில் நடவு செய்யும் போது நல்ல வருமானம் கிடைக்கும். தனித் தோப்பாக சாகுபடி செய்யும் சிலர் 15 அடி இடைவெளியில் ஏக்கருக்கு 200 கன்றுகளை மட்டுமே நட்டு பராமரிக்கிறார்கள். இந்த முறையிலும் வருமானத்துக்கு குறைவு இருக்காது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,770-2,800

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
3,730-3,780

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
8,500-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,560-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,826-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிர்ணாபாள், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 12,300-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
10,800.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,650-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,155.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்டஎண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,455.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,100.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
555-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஏப்.27-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (ஆவரை) | ரூ. 5000 | 52.00 |
| சுண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஏப்.27-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 10,545
2. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 16,073
3. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 14,201
4. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 15,691
5. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 15,747
6. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 22,496

## கோவை உழவர் சந்தை

கோவை,ஏப்.27-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | | | (கிலோவுக்கு) | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 58-00 | காலிப்பிளவர் | ரூ. | 18-24 |
| கத்தரிக்காய் | ரூ. | 8-14 | பொறியல் தட்டை | ரூ. | 12-14 |
| வெண்டைக்காய் | ரூ. | 14-16 | பச்சை மொச்சை | ரூ. | 30-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 8-00 | தேங்காய் | ரூ. | 8-15 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 11-12 | பட்டாணி | ரூ. | 64-00 |
| புடலை | ரூ. | 8-10 | பூண்டு | ரூ. | 100 -110 |
| பீர்க்கான்காய் | ரூ. | 28-00 | கறிவேப்பிலை | ரூ. | 20-24 |
| சுரைக்காய் | ரூ. | 8-10 | அகத்தி | ரூ. | 15-00 |
| பாகற்காய் | ரூ. | 18-20 | வாழைக்காய் | ரூ. | 14-00 |
| கொத்தவரை | ரூ. | 12-14 | குடைமிளகாய் | ரூ. | 36-00 |
| பூசணிக்காய் | ரூ. | 10-12 | சாதா பீன்ஸ் | ரூ. | 20-22 |
| அரசாணிக்காய் | ரூ. | 7-8 | டபுள்பீன்ஸ் | ரூ. | 24-00 |
| மேராக்காய் | ரூ. | 18-20 | அறிபீன்ஸ் | ரூ. | 24-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 16-00 | புஸ்பீன்ஸ் | ரூ. | 30-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 18-00 | காளான் | ரூ. | 80-140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 22-29 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 11-00 | மாங்காய் | ரூ. | 7-16 |
| இஞ்சி | ரூ. | 32-00 | திராட்சை | ரூ. | 40-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 20-22 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 15-16 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 15-16 | கொய்யா1கிலோ | ரூ. | 24-28 |
| சேனைகிழங்கு | ரூ. | 28-00 | மாதுளை1கிலோ | ரூ. | 160-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 26-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-16 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | வரமிளகாய் | ரூ. | 90-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | மாம்பழம் | ரூ. | 35-70 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 115-120 |
| சிறுகிழங்கு | ரூ. | 30-00 | சாத்துக்குடி | ரூ. | 36-00 |
| முள்ளங்கி | ரூ. | 9-12 | நெல்லிக்காய் | ரூ. | 44-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 14-18 | ஆரஞ்சு | ரூ. | 66-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 8-13 | வெள்ளரி | ரூ. | 10-12 |
| நூல்கோல் | ரூ. | 18-20 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| கொத்துமல்லி | ரூ. | 30-32 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 34-00 |
| டர்னிப்ஸ் | ரூ. | 18-20 | அவரை | ரூ. | 18-24 |
| முட்டைகோஸ் | ரூ. | 8-10 | நிலக்கடலை | ரூ. | 35-00 |
| கலர்கோஸ் | ரூ. | 14-00 | மக்காச்சோளம் | ரூ. | 12-18 |
| புதினா | ரூ. | 16-00 | தர்பூசணி | ரூ. | 9-12 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.25200 |
| மிளகு (சேட்டன்) | ரூ.26000 |
| மிளகு (வயநாடன்) | ரூ.27000 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 11000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 12000 |
| சுக்கு(புதியது) | ரூ.15000 |
| சுக்கு(பழையது) | ரூ.10100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10000 |
| கொப்பரை நாடன் | ரூ.6675 |
| கொப்பரை ராசு | ரூ.6550 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6775 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.7400 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6800 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 23000 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23500 |
| ரப்பர் பால் | ரூ. 17500 |
| காப்பி | ரூ. 10700 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 5700 |
| நேந்திரகாய் | ரூ. 1300 |
| இஞ்சி | ரூ. 1200 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஏப்.27-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,500 | 96.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1100 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1030 | (-) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1620 | 110.00 |
| என்.கே.எஸ்பிராண்ட் | ரூ. 1,850 | 118.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 58.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,330 | 90.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பட்ஸ் பிராண்ட் | ரூ. 1,225 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 990 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,060 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,060 | - |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.204.00 | அதிகபட்சவிலை | ரூ.273.00 |
| சராசரி விலை | ரூ.178.22 | சராசரி விலை | ரூ.249.61 |
| குறைந்தபட்சவிலை | ரூ.140.00 | குறைந்தபட்சவிலை | ரூ.240.00 |

பட்டு நூல் ரூ.1,922

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,320.00 | 16,320.00 | 16320.00 |
| ஒரு கிராம் | 2,040.00 | 2,040.00 | 2040.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 68,560.00 | 73,300.00 | 73,500.00 |
| ஒரு கிராம் | 73.35 | 73.30 | 73.50 |